IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# சோழர் காலத்தில் தளிச்சேரிப் பெண்கள் நிலை

முனைவர் **பா. பிரமிளா**
இணை பேராசிரியர் ஊ துறைத் தலைவர்
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

**திருமதி.நா. பாரதி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

## தளிச்சேரிப் பெண்கள்

சோழர் காலத்தில் கோயில்களின், எண்ணிக்கை பெருகியவுடன், கோயில் என்ற அமைப்பு ஒரு பெரும் நிறுவனமாகவும் மாறத் தொடங்கியது. பொருளாதார வசதிகளும், மக்கள் மற்றும் மன்னர்தம் அரவணைப்பும் கிடைத்த நிலையில், கோயில்களின் பணிகளும் கூடின. ஒவ்வொரு கோயிலும் தன் பொருளாதார வசதிக்கேற்ப பல பணியாளர்களை அமர்த்திக் கொண்டனர். இசைக் கலைஞர்கள் இல்லாத கோயில்களே இல்லையென்னுமளவிற்கு ஒவ்வொரு கோயிலிலும் பாடுவாரும், கருவிக் கலைஞர்களும் இடம் பெற்றனர். கோயிலின் நித்த வழிபாடுகளின் போதும் இறை ஊர்வலஙகளின் போதும், ஆடல் நிகழ்த்தப் பெண்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் கூத்திகள், தளிச்சேரிப் பெண்டுகள், தேவரடியார் எனப் பல பெயர்களால் அழைக்கபபட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

சோழர் காலத்தில் ஆடல் பயிற்றுவிக்கப்பட்ட இடங்களாகக் கோயில்களையும், தளிச்சேரிகளையும் கூறுகின்றனர். கோயிலின் தேவைக்கேற்ப ஆடல் நிதழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்கவும், ஆடல்திறனை, வளர்க்கவும் கோயில்களில் நட்டுவர்களும், தலைக்கோலிகளும் இருந்தனர். கோயில்களக்குப் பெண்களைக் கொடையாகத் தரும் பழக்கமும் இருந்தது. இது இரண்டாம் நந்திவர்மன் காலத்திலேயே நடைமுறையில் இருந்ததைக் காஞ்சிபுரம் முக்தேசுவரத்துக் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது1.

சோழர்கள் காலத்தில் இப்பழக்கம் பரவலாகக் கைக்கொள்ளப்பட்டமைக்குப் பல கல்வெடடுகள் சான்றுகளாக அமைகின்றன. கலைத்தொடர்பற்ற பெண்களும் கோயில்களுக்குத் தரப்பட்டனர். தேவரடியார் என்றழைக்கப்பட்ட இவர்கள் கோயிலைத் துய்மைப்படுத்தும் பணிகளான அலகிடுதல், திருமெழுகிடுதல், ஆகியவற்றுடன், கோயிலுக்கு வரும்நெல்லைக் குற்றி அரிசியாக்குதல், இறைவனுக்குப் பூப்பறித்துத் தொடுத்தல் போன்ற எளிய பணிகளையும் செய்து வந்தனர். இவர்களுள் திறன்மிக்கவரை ஆடல், பாடல், போன்ற கலைப்பணிகளுக்கும் கோயில்கள் பயன்படுத்திக் கொண்டன. ஆடற்பெண்களான பதியிலார், தளியிலார், ஆகியோரும், நட்டுவர்களும், இசைக்கலைஞர்களும் அவர்களுக்கு ஆடலையும் பாடலையும் பயிற்றுவித்தனர். இப்பயில்விக்கும் பணி கோயில்களிலும், ஆடற்கலைஞர்களின் குடியிருப்புப் பகுதிகளான தளிச்சேரிகளிலும் நிகழ்ந்தது. கோயில்களில் திருச்சுற்று மாளிகைப் பத்திகளிலும், மண்டபஙகளிலம், ஆடல் பயிற்றவிக்கப்பட்டது. பல கோயில்களில் ஆடல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென்று நாடக சாலைகளும், நிருத்த மண்டபங்களும் பிற மண்டபங்களும் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன2.

இந்த ஆய்வுக் கட்டுரையில், தளிச்சேரிப் பெண்கள் நிலை, அவர்களின் தொண்டு மற்றும் வாழ்க்கை முறை பற்றி சொல்லப்படுகிறது.

இதற்கான முக்கிய ஆதாரங்களாக, திருவையாறு, இராசகேசரிநல்லூர், திருவிடைமருதூர், கிள்ளிக்குடி, தலையாலங்காடு, வயலூர், கடம்பூர், திருமறைக்காடு, காவிரிப்பூம்பட்டினம், பந்தநல்லூர், பழுவூர், வேளூர், வீரபுரம், தளிச்சாத்தங்குடி, கொற்றமங்கலம், திருப்பழனம் ஆகிய ஊர்களில் தளிச்சேரிப் பெண்கள் பற்றிய இவ்வூர்களில் உள்ள கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளன.

# சோழர் காலத்தில் தளிச்சேரிப் பெண்கள் நிலை

செல்வி. நா.பாரதி
முனைவர் பட்ட ஆய்வாளர் ,
வரலாற்றுத்துறை
பாரதி மகளிர் கல்லூரி (த)
சென்னை – 600 108.

**முன்னுரை**

சோழர் காலத்தில் கோயில்களின், எண்ணிக்கை பெருகியவுடன், கோயில் என்ற அமைப்பு ஒரு பெரும் நிறுவனமாகவும் மாறத் தொடங்கியது. பொருளாதார வசதிகளும், மக்கள் மற்றும் மன்னர்தம் அரவணைப்பும் கிடைத்த நிலையில், கோயில்களின் பணிகளும் கூடின. ஒவ்வொரு கோயிலும் தன் பொருளாதார வசதிக்கேற்ப பல பணியாளர்களை அமர்த்திக் கொண்டனர். இசைக் கலைஞர்கள் இல்லாத கோயில்களே இல்லையென்னுமளவிற்கு ஒவ்வொரு கோயிலிலும் பாடுவாரும், கருவிக் கலைஞர்களும் இடம் பெற்றனர். கோயிலின் நித்த வழிபாடுகளின் போதும் இறை ஊர்வலஙகளின் போதும், ஆடல் நிகழ்த்தப் பெண்கள் பணியமர்த்தப்பட்டனர். அவர்கள் கூத்திகள், தளிச்சேரிப் பெண்டுகள், தேவரடியார் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

**சோழர்கால கோயில்களில் பெண்கள்**

சோழர் காலத்தில் ஆடல் பயிற்றுவிக்கப்பட்ட இடங்களாகக் கோயில்களையும், தளிச்சேரிகளையும் கூறுகின்றனர். கோயிலின் தேவைக்கேற்ப ஆடல் நிதழ்ச்சிகளை அமைத்துக் கொடுக்கவும், ஆடல்திறனை, வளர்க்கவும் கோயில்களில் நட்டுவர்களும், தலைக்கோலிகளும் இருந்தனர். கோயில்களுக்குப் பெண்களைக் கொடையாகத் தரும் பழக்கமும் இருந்தது. இது இரண்டாம் நந்திவர்மன் காலத்திலேயே நடைமுறையில் இருந்ததைக் காஞ்சிபுரம் முக்தேசுவரத்துக் கல்வெட்டு எடுத்துரைக்கின்றது1.

சோழர்கள் காலத்தில் இப்பழக்கம் பரவலாகக் கைக்கொள்ளப்பட்டமைக்குப் பல கல்வெட்டுகள் சான்றுகளாக அமைகின்றன. கலைத்தொடர்பற்ற பெண்களும் கோயில்களுக்குத் தரப்பட்டனர். தேவரடியார் என்றழைக்கப்பட்ட இவர்கள் கோயிலைத் துய்மைப்படுத்தும்

பணிகளான அலகிடுதல், திருமெழுகிடுதல், ஆகியவற்றுடன், கோயிலுக்கு வரும்நெல்லைக் குற்றி அரிசியாக்குதல், இறைவனுக்குப் பூப்பறித்துத் தொடுத்தல் போன்ற எளிய பணிகளையும் செய்து வந்தனர். இவர்களுள் திறன்மிக்கவரை ஆடல், பாடல், போன்ற கலைப்பணிகளுக்கும் கோயில்கள் பயன்படுத்திக் கொண்டன. ஆடற்பெண்களான பதியிலார், தளியிலார், ஆகியோரும், நட்டுவர்களும், இசைக்கலைஞர்களும் அவர்களுக்கு ஆடலையும் பாடலையும் பயிற்றுவித்தனர். இப்பயில்விக்கும் பணி கோயில்களிலும், ஆடற்கலைஞர்களின் குடியிருப்புப் பகுதிகளான தளிச்சேரிகளிலும் நிகழ்ந்தது. கோயில்களில் திருச்சுற்று மாளிகைப் பத்திகளிலும், மண்டபஙகளிலும், ஆடல் பயிற்றவிக்கப்பட்டது. பல கோயில்களில் ஆடல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென்று நாடக சாலைகளும், நிருத்த மண்டபஙகளும் பிற மண்டபங்களும் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன2.

**தளிச்சேரி பெண்கள்**

தளிச்சேரிக்ள ஆடற்பெண்களின் குடிறிருப்புப் பகுதிகளாகக் கல்வெட்டுகளால் சுட்டப்படுகின்றன. நாம் வாழும் இல்லங்களிலேயே மகளிர் ஆடல் பயின்றதைக் கொண்டும் பரத்தையர், அவர்தம் சேரிகளிலேயே ஆடலும், பாடலும் பயின்ற நிகழ்ச்சிகள் நடத்தி, ஆடவரைக் கலந்து மகிழ்ந்ததை நாடகக் கணிகையர் தம் இல்லங்களிலேயே ஆடற்குழுக்களைக் கொண்டிருந்தனர். இதனால் ஆடல் பெண்களின் குடியிருப்புகள் வாழிடங்களாக மட்டுமல்லாது ஆடல் பயிலும், பயிற்றுவிக்கும் களங்களாகவும், ஆடல் நிகழ்ச்சிகள் அரங்கேறும் இடங்களாகவும் தொன்றுதொட்டே விளங்கியதை அறியமுடிகிறது.

முதன்முதலாச் சோழர் கல்வெட்டுகளிலேயே ஆடல் மகளிர் பற்றிய கல்வெட்டுகள் சோழர்கள் காலத்தில்தான் அதிக அளவிலான எண்ணிகையில் கிடைக்கப் பெற்றன. தளிச்சேரி என்ற அமைப்பு இக்காலத்தில் வெளிப்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். தளிச்சேரி என்ற கூட்டுச்சொல்லில் உள்ள தளி என்ற சொல் கோயிலையும், சேரி யென்ற சொல் குடியிருப்பையும் சுட்டுவதால் கோயில் சார்ந்த குடியிருப்பே தளிச்சேரி என்பது விளங்கும்3.

**தளிச்சேரிக் கல்வெட்டு**

முதல் இராசாராசரின் தஞ்சாவூர் இராஜராஜீசுவரம் திரு முருகன்கோயிலான வடக்குத் திருச்சுற்று மாளிகைச் சுவரின் வெளிப்புறத்தே வெட்டப்பட்டிருக்கும் மிக நீண்ட கல்வெட்டுகளுள் ஒன்று இத்திருக்கோயில் சார்ந்து அமைந்திருந்த தளிச்சேரி பற்றி விரிவான தகவல்களைத் தருகிறது4.

**இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரி**

இக்கல்வெட்டின் வழி வெளிப்படும் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் குடியிருப்புகள், இராஜராஜீசுவரத்திற்கு வடக்கிலும், தெற்கிலும் மேற்கிலுமாய் அமைந்திருந்தன. இவை வடக்குத் தளிச்சேரி, தெற்கு தளிச்சேரி மேற்கு தளிச்சேரி என்று பெயரிடப் பெற்றிருந்தன. இவற்றுள் தெற்கு, வடக்குத் தளிச்சேரிகள் விடசிறியது. தென்சிறகு எனும் இருபெரும் பிரிவுகள் கொண்டிருந்தன. தெற்குத் தளிச்சேரி தன் இருசிறகுகளிலும் சிறகிற்குத் தொண்ணூற்றிரண்டு வீடுகள் என நூற்றெண்பத்து நான்கு வீடுகளைக் கொண்டிருந்தது. வடக்குத் தளிச்சேரியின் தென்சிறகில் தொண்ணூற்றாறு வீடுகளும் இருந்தன. மேற்கு இருபத்தைந்து வீடுகள் கொண்டிருந்தது. இந்நானூறு வீடுகளிலும் நானூறு பெண்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். இவர்களைக் கல்வெட்டுத் தளிச்சேரிப் பெண்டுகள் என்றழைக்கின்றது. இவர்கள் சோழமண்டலத்தைச் சேர்ந்த பல்வேறு தளிச்சேரிகளிலிருந்து வரவழைக்கப்பட்டு இங்குக் குடியமர்த்தப்பட்டவர்களாவார்.

**சோழமண்டலத் தளிச்சேரிகள்**

முதல் இராசராசர் கலத்தில் சோழமண்டலத்தில் சிறப்புடன் திகழந்த நூற்றிரண்டு தளிச்சேரிகளின் இக்கல்வெட்டால் தெரிய வருகின்றன5.

**கோயில் தளிச்சேரிகள்**

தளிச்சேரிகள் இருந்ததாகக் கல்வெட்டுக் குறிப்பிடும் நாற்பத்தொன்பது கோயில்களுள் அரபுரத்து ஸ்ரீதாழி விண்ணகர், அம்பர் அவனிநாராயண விண்ணகர், பாம்புணி தஞ்சாவூர் மாமணிக்கோயில் என்பன பெருமாள் கோயில்கள் ஆகும். எஞ்சிய நாற்பத்திரண்டு கோயில்களும் சிவபெருமானின் திருக்கோயில்களாக விளஙகுகின்றன. ஊர்களில் நாற்பத்தொன்பது கோயில்களும் இருபது ஊர்களில் இருந்தன. இவற்றுள் ஐந்து பழையாற்றிலும், ஆறு திருவாரூரிலும், நான்கு நியமத்திலும், நான்கு தஞ்சாவூரிலும் இருந்தன. பாம்புணி, கோட்டூர், பழவூர், நன்னிலம் ஆகிய நான்கு ஊர்களில் ஊருக்கு இரண்டு கோயில்கள் தளிச்சேரி அமைப்புடன் இருந்ததை அறிய முடிகிறது.

நாற்பத்தொன்பது கோயில்களுள் திருவாரூர்ப் பெரிய தளியை ஒட்டியமைந்திருந்த தளிச்சேரியே மிக அதித அளவிலான பெண்களை இராஜராஜீசுவரத்திற்கு அனுப்பியுள்ளது. இத்தனிச் சேரியிலிருந்து பத்தொன்பது பெண்கள் தஞ்சாவூருக்கு மாற்றலாகியுள்ளனர். இகற்கடுத்த நிலையில் பழையாற்று வடதனி பதின்மூன்று பெண்களையும், அரிகுலகேசரி ஈஅவரம் பத்துப் பெண்களையும் திருவையாற்று உலகமாதேவீசுவரம் ஒன்பது பெண்களையும் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக்கு அனப்பியுள்ளனர்6.

**ஊரகத் தளிச்சேரிகள்**

தளிச்சேரிகள் இருந்த இடங்களாக ஐம்பத்து மூன்று ஊர்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இவ்வூர்கள் பலவற்றுள் திருக்கோயில்கள் இருந்தபோது இத்தளிச்சேரிகள் கோயில் சார்பற்றவையாய் ஊரகத்தே அமைக்கப்பட்டிருந்தன. நாகப்பட்டினத்தில் இருந்த சேனாமுகம் என்ற இடத்தில் அமைந்திருந்த கோயில் குறிப்பிடத்தக்கது. இந்நாட்களில் நிலையான சேனாமுகங்களில் ஆடற்பெண்களின் குடியிருப்புகள் அமைந்திருந்தமைக்கு இக்கல்வெட்டுச் சிறந்த சான்றாகும்7.

ஆருரின் பல்வேறு கோயில்களிலிருந்து வந்தாற்போல ஊர்ப் பகுதியிலிருந்தும் ஆடற்பெண்கள் இராஜராஜீசுவரத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர். பல கோயில்கள் நிறைந்த பழையாற்றின் ஊர்ப்பகுதியிலிருந்தும் ஒரு பெண் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக்குக் குடிப்பெயர்ந்துள்ளனர். பழையறைச் சேர்ந்த அவனி நாராயணபுரமும் நான்கு பெண்களை இத்தளிச்சேரிக்கு அனப்பியுள்ளது. தளிச்சேரிகள் இருந்த பிற ஊர்களாகத் திருவையாறு, புறையாச்சேரி, மிறையில், கஞ்சாற நகரம், இராசகேசரி நல்லூர், திருவிடைமருதூர், கிள்ளிக்குடி, நந்திபுரம், மட்டை தலையாலஙகாடு, திருமறைக்காடு, காவிரிப்பூம்பட்டினம், பந்தநல்லூர், பழுவூர், தளிச்சாத்தாஙகுடி, ஆகிய ஊர்களைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது8.

இந்த ஊர்களில் இருந்து தளிச்சேரிகளில், மிகுதியான அளவில் தளிப்பெண்களை இராஜராஜீசுவரத்துக் குடியிருப்புகளுக்கு அனுப்பி வைத்தது. திருவிடைமருதூர், தளிச்சேரியாகும். சோழமண்டலத்துத் தளிச்சேரிகளிலிருந்து இராஜராஜீசுவரத்திற்கு வந்த பெண்களில் மிகுதியான அளவில் வந்தவர்கள் திருவாரூர்ப் பெரிய தளிச்சேரியைச் சேர்ந்தவர்கள் உரகக் குடியிருப்புகளில் ஆடல் தேர்ந்த பெண்கள் மிகுதியான அளவில் இருந்ததை உணரமுடிகிறது9.

இக்கல்வெட்டினால் முதல் இராசராசர் காலத்தில் சோழமண்டலத்தில் மட்டும் ஏறத்தாழ நூற்றிரண்டு தளிச்சேரிகள் இருந்தமையையும் அவை ஒவ்வொன்றிலும் ஆடல் தேர்ந்த பெண்கள் எண்ணிக்கையில் பலராய் வாழ்ந்தமையும் அறிய முடிகிறது. சோழர் காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தளிச்சேரிகள் பரவியிருந்தமையையும் சோழ மண்டலத்தில் அவை மிகுதியான அளவில் இருந்தமையையும் அறிய முடிகின்றது. முதல் இராசாராசரின் இராஜராஜீசுவரத்தில் மட்டும் ஏறத்தாழ நானூறு தளிச்சேரிப் பெண்டுகள் இருந்தனர். அந்நாளில் தமிழ்நாடு முழுவதும ஆயிரக்கணக்கான ஆடலாசிரியர் கோயில்களிலும் ஊரகக் குடியிருப்புகளிலும் இருந்தவாறு ஆடற்கலை வளர்த்தமையை உணர்த்த முடிகின்றது10.

ஆடல் பயின்று தேர்ந்திருந்த ஊரகத் தளிச்சேரிப் பெண்டுகளைக் கோயில்கள் தத்தம் தளிச்சேரிகளுக்கு அழைத்துப் பணியமர்த்தக் கொண்டமைக்குத் தளிச்சேரிக் கல்வெட்டுச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

**ஆடலாசான்கள்**

சோழர்காலத்தில் ஆடற்கலை நூல்களும், பயிலிடங்களும் இருந்தாற்போல ஆடல் கற்பிக்க நட்டுவ ஆசான்களும், தலைக்கோல் மகளிரும் கூத்தர்களும் இருந்தனர். ஆடல் மகளிருக்கும் பாடல்களும் இசையும், கற்றுத்தரப் பாணர்களும், பிடாரர்களும் அடிகளமாரும் உதவினர். இப்பெண்கள் இசைக் கருவிகளை இயக்கும் முறைகளையும் கற்றுத் தேர்ந்தனர். சோழர் ஆடற்சிற்பங்கள் பெரும்பான்மையானவற்றுள் பெண்களே கருவிக் கலைஞர்களாக இயஙகியதைக் காண முடிகிறது11.

சோழமண்டலத்தில் பல்வேறு தளிச்சேரிகளிலிருந்து இக்கோயில் தளிச்சேரிக்கு வரவழைக்கப்பட்ட நானூறு ஆடற் பெண்களுக்கும் நட்டுவம் செய்வகற்காக ஏழு ஆடலாசிரியர்கள் பணியமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு இரண்டு பேர் நிலமும் இருநூறு கலம் நெல்லும் வருவாயாக இவ்வாடல் ஆசிரியர்களுக்கு வாழ்வூதியமாகத் தரப்பட்டது.

இவர்கள் பொறுப்பேற்றிருந்த கோயில்களில் அகமார்க்கமான மெய்கூத்தை அங்கிருந்த தளியிலார், பதியிலார், தேவரடியார், தளிச்சேரிப் பெண்டுகளுக்கும், கற்றுத்தந்தனர். தற்போது கிடைக்கும் சோழர் காலத்திருந்த கலை நூல்களுள் பஞசமரபு ஒன்றே மெய்க்கூத்தின் மூவகைகளான தேசி, வடுகு, சிஙகளம் ஆகியன பற்றிக் குறிப்பிடுவதுடன் அவற்றுக்கான நடன நிகழ்ச்சிகளையும் முறைப்படுத்திப் பேசுகிறது. தேவரடியார்கள் அகமார்க்கம் நிகழ்த்தியதை இங்குள்ள ஆதிபுரீசுவரர் கோயில் கல்வெட்டொன்று எடுத்துரைக்கின்றது. கோயிலில் ஆடல் நிகழ்ச்சிகளை அமைப்பதற்கும், அக்கோயில் தேவரடியார்க்கு ஆடல் பயிற்றுவிக்கவும் அவருக்குக் கோயிலாரால் கட்டுவக்காணியாக நிலம் வழஙகப்பட்டிருந்தது. தமிழகத்திலும் பெரும்பாலான கோயில்களில் நட்டுவர்கள் இருந்தமையையும் அவர்கள் அவிநயம், அகமார்க்கம், உள்ளிட்ட பல்வேறு ஆடல்வகைகளைக் கற்றுத் தந்தமையும் அறிய முடிகின்றது.

**தலைக்கோளயர்**

ஆடலில் சிறந்து விளங்கிய பெண்களக்கே அக்காலத்தில் தலைக்கோலியர் பட்டம் வழங்கப்பட்டது. சோழா காலத்தில் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் தலைக்கோலியர் பலராய் இருந்து பணியாற்றியுள்ளனர். அரங்கியல் மகளிர்க்கு ஆடல் வகுக்கும் தலைக்கோலியர் பெண்டிர் என்னும் பெருங்கதைப் பாடலடியால் தலைக்கோலழியர் ஆடலாசான்களாகத் திகழ்ந்ததை அறியமுடிகிறது12.

திருவாரூர்த் தியாகராயசாமி கோயிலிலுள்ள மூன்று சோழர் காலக் கல்வெட்டுகள் அத்திருக்கோயிலில் பணியாற்றிய மூன்று தலைக்கோலியர் பற்றி தகவல்கள் தருகின்றன.

அத்திருக்கோயிலில் இன்றளவும் காணப்படும் தேவதாசியரின் மண்டபம், இலக்கியப் புகழும் கல்வெட்டுப் பெருமையும் கொண்டதாகும். அத்திருமேனிக்கு ஆடல்கள் நிகழ்த்துவது ஆருர்த் திருக்கோயிலில் மரபாக இருந்து வந்தமை இக்கல்வெட்டுகளால் உணர முடிகின்றது. திருமேனி எழுந்தருளுவிக்கப்பட்டபோது பூஙகோயில் நாயகத் தலைக்கோலி, புக்கத்துறை வல்லவத் தலைக்கோலி ஆகியோர் ஆடல் நிகழ்ச்சிகள் நடத்தினர். இத்தலைக்கோலியர் இருவருமே ஆருர்க்கோயில் பதியிலார்களாக அறியப்படுகின்றனர். ஆருர்ப் பதியிலாருள் உமையாழ்வியான அழகிலும் மழகிய தேவ தலைகோலி சன்னதித் திருவீதி வடசிறகிலும் வாழ்ந்தார்.

திருவிடைமருதூர்த் திருக்கோயிலிலும் தலைக்கோலியர் பலராக இருந்து ஆடற்கல்வி புகட்டினர். உத்தமசோழருடையதாகக் கருதத்தக்க பரகேசரிவர்மனின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் தளித்தேவனார் மகளான நக்கன் ஆச்சி நங்கையான இரண்டாயிரத் தலைகோலியையும், வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பர கேசரிவர்மரான ஆதித்த கரிகாலரின் நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் இளங்கிலிசானை தலைக்கோலிகளையும் மதுரை கொண்ட கோப்பரகேசரியான முதல் பராந்தகரின் கல்வெட்டால் தளிச்சேரி தேவனார் மகளார் தலைக் கோலியையும் மற்றொரு கல்வெட்டால் திருவிடைமருதில்

தலைக்கோலியையும் அறியமுடிகின்றது13. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக்கு அதிக அளவிலான ஆடற்பெண்களை அனுப்பிய ஊர்களுள் திருவிடைமருதூரும் ஒன்று.

திருவையாறு அய்யாநப்பர் கோயில் வளாகத்திலுள்ள வடகைலாசத்தில் பல தலைக்கோலியர் பணியாற்றினர். நக்கன் அரங்கமான ஜயங்கொண்ட சோழத் தலைக்கோலி, நக்கன் பூமியான பரமாக்கவிடங்கத் தலைக்கோலி, நக்கன் சோழவிச்சாரியான ஒலோகமாதேவித் தலைக்கோலி, மதுராந்தகத் தலைக்கோலி, நக்கன் திரிபுவனமாதேவியான நிகாிலிசோழத் தலைக்கோலி ஆகியோர் அவர்களுள் சிலறாவர். இத்தலைகோயலியருடன் நட்டுவர்களாக அமைந்து வடகைலாசத்து ஆடற்பெண்கள் கலை பயில உதவினர்14.

இத்தலைகோலிப் பெருமக்கள் கோயில்களில் ஆடல் நிகழ்த்தியதுடன் அங்கிருந்த தேவரடியார்க்கு ஆடல் கற்றுத் தந்தனர். திருவெற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் ஆடலிலும், பாடலிலும், வல்லவராய்த் திகழ்ந்த தலைக்கோலியர் பலராய் இருந்தனர். அவர்கள் கோயில் நடைமுறைகளில் பங்கேற்றதுடன் தேவரடியார்க்கும், தளியிலார்க்கும் ஆடலமைத்துத்தரும் பணியையும் மேற்கொண்டிருந்தனர். கோயிலில் மிகச் சிறப்பாக நடத்தப்பெற்ற ஆவணித் திருவிழாவின் எட்டாம் நாளிரவு ஒருவரான தலைக்கோலியின் அகமார்க்க ஆடல் நிகழ்ச்சி நடைபெற்றது15.

சோழர் தலைகோலி, நக்கன் மோடியான மும்முடிசோழத் தலைக்கோலி, நக்கன் கொற்றமான வீதி விடங்கத் தலைக்கோலி, நக்கன் குரவியான திருவரங்கத் தலைக்கோலி நக்கன் கற்பகவல்லியான திருவையாற்றுத் தலைக்கோலி ஆகியோரை அறிய முடிந்துள்ளது. இக்கோயிலில் இரண்டாம் பாண்டியப் பேரரசின் காலத்துப் பகுதியிலாரும். தேவரடியாரும் இருந்து பணி செய்தமையை மற்றொரு புதிய கல்வெட்டுத் தெரிவிக்கின்றது16. கோயில் சார்ந்த நிலையிலிருந்து நட்டுவர்களும், தலைக்கோலியரும் அங்குப் பணியாற்றிய பெண்களுக்கு ஆடல் கறபித்தது போலவே, தனிப்பட்ட முறையிலும் சில கலைஞர்கள் ஆடற்கலையைப் போற்றி வளர்த்தனர். கூத்தர்கள் என்றழைக்கப்பெற்ற இக்கலைஞர்கள் கோயில் திருவிழாக்களில் பஙகேற்று ஆடல் நிகழ்த்தினர். இக்கூத்தர்கள் சாந்திக்கூத்து,

சாக்கைக்கூத்து, ஆரியக்கூத்து, தமிழ்க்கூத்து, கழாய்க்கூத்து என பலவகைக் கூத்து வடிவங்களை நிகழ்ச்சிகளாக நடத்திப் பொருளீட்டி வாழ்ந்தனர் இவற்றை பெண்கள் நிகழ்த்தினர்.

தைப்பூசம், சித்திரைத் திருவிழா, வைகாசித் திருவிழா, புரட்டாசித் திருவிழா, ஐப்பசித் திருவிழா, மார்கழித் திருவிழா எனப் பெரும்பாலான கோயில் திருவிழாக்களில் சிறப்பு நிகழ்ச்சிகளாய் இவர்தம் கூத்துகள் நிகழ்ந்தன. கோயில் சார்ந்த ஆடற்பெண்களும் இக்கூற்று வகைகள் சிலவற்றைப் பயின்றாடினர்17.

இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிக் கல்வெட்டு நான்கு பாணர்கள் அக்கோயிலில் பணியமர்த்தப்பட்டிருந்த தகவலைத் தருகிறது. உத்தமன் சூற்றியான அரிகுலகேசரி சாக்கை, அய்யாறன் அறிஞசி, அபராஜிதன் வடவாயிலான பல்லவன் சாக்கை, வடூவூர் அறிஞசி ஆகிய இந்நால்வரும் தலைக்கு நூற்றைம்பது கலம் நெல் ஆண்டு ஊதியமாகப் பெற்றனர்.

பாணர் என்ற சொல் பாடுநரைக் குறிப்பதாகும். திரவிடைமருதூர்க் கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்களின் ஒன்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, பாணன் இருமுடிசோழன் பிரானான அசஞ்சலப் பேரயனைச் சுட்டுவதுடன், இக்கோயிலில் தனியிலார், தேவரடியாரைப் பாட்டுவிக்கவும் பாணரை இடக் கடவானாகவும் என்று தெளிவாகத் தெரிகின்றது.

திருவிடைமருதூர்க் கல்வெட்டின் துணைக்கொண்டு, இராஜராஜீசுவாத்துப் பாணர்கள் அத்திருக்கோயிலில் "இறைத்திரு முன்னால் பாடியதுடன், அக்கோயில் தளிச்சேரிக்கு வரவழைக்கப்பட்டுக் குடியமர்த்தப்பட்ட நானூறு தளிச்சேரிப் பெண்களுக்கும் பாடல் பயிற்றுவிக்கும் பணியையும் மேற்கொண்டிருந்தனர் என்று உறுதியாகக் கூறுகின்றனர். வயலூரில் மூன்று பெண்கள் திருப்பதிகம் பாடினர். திருவெற்றியூர்க் கோயிலில் திருப்பதிகம், அகமார்க்கம் பாடப்பதினாறு தேவரடியார் பணியிலிருந்தனர். வைணவக் கோயில்களின் திருவாய்மொழி பாடப்பெற்றது. இவற்றையெல்லாம் பாடியாட கோயிலில் இருந்த தேவரடியார்க்கும் தனியிலார்க்கும், பதியிலார்க்கும், தளிச்சேரிப் பெண்களுக்கும் தகுந்த பயிற்சியளிக்கப்பட்டது18.

**ஆடல் வகைகள்**

மனிதர்கள் ஆடுமாறு அமைந்துள்ள கரணச்சிற்படிகளும் கண்டபாதங்களில் இடம்பெற்றுள்ளன. இதில் ஆடும் பெண்ணின் கால்கள் ஸ்வஸ்திகமாக உள்ளன. தலையை இடப்புறம் சாய்த்து ஆடும் இப்பெண்ணின் ஆடையலங்காரமும், அணிமணிகளும் அந்நாளைய கரணக் காரிகையரின் ஒப்பனைத் திறம் காட்டுவனவாய் அமைந்துள்ளன. ஆடுமகளின் இடப்புறத்தே பெண் இசைக்கலைஞர் உடுக்கையை இசைத்தப்படி தாமும் ஆடுகிறார். மயிலாடுதுறை பூம்புகார் சாலையில், திருவெண்காட்டிற்கு அண்மையில் உள்ளது மேலப்பெரும்பள்ளம். இங்குள்ள வலம்புரநாதர் கோயில், கல்வெட்டுகளிலும் அதே பெயரில்தான் அழைக்கப்படுகிறது19. இக்கோயிலில் முப்பதிற்கும் மேற்பட்ட திருப்பணியின்போது சிதைவுகளாக இப்போது நல்ல நிலையில் காணப்படுகின்றன. இவை அனைத்திலும் ஆடுபவர்கள, பெண்களாகவே காட்டப்பட்டுள்ளனர்.

கோயில்களுக்கு இசைகூட்டம் கலைஞர்களாய்ப் பெரும்பாலும் பெண்களே அமைந்துள்ளனர். இவர்கள் இசைக்கும் கருவிகளாய் மத்தளம், குடமுழவு தாளம், உடுக்கை ஆகிய இசைக்கருவிகள் இடம்பெற்றுள்ளன. தளிச்சேரிகளில் வாழ்ந்தவர்கள் தளிச்சேரிப்பெண்டுகள் என்று அறியப்பட்டனர். இவர்கள் கோயில் தளிச்சேரிகளிலும் ஊரகத் தளிச்சேரிகளிலும் வாழ்ந்த ஆடற்கலைஞர்களாவர். ஊரகத் தளிச்சேரிகளில் வாழ்ந்தவர்கள் ஊர்விழாக்களிலும், கோயில்களின் சிறப்பு விழாக்களிலும் ஆடல் நிகழ்த்தியவராவர். வாய்ப்புகள் கிடைத்தபோது கோயில் தளிச்சேரிகளுக்கும் குடியேறிய இவர்கள், அங்குத் தளிபெண்டுகளாக வாழ்ந்தனர்.

பதியிலாரும், தளியிலாரும், தளிச்சேரிப் பெண்டுகளைத் கோயில்களால் அல்லது அரசர்களால் பணியமர்த்தப்பட்டவர்களாகவே கல்வெட்டுக்களில் காட்சி தருகின்றனர். தேவரடியார்களிலும், மேம்பட்ட நிலையில் இருந்த இவர்கள் தத்தம் கோயில்களில் நிகழ்த்த ஆடல், பாடல் தொடர்புடைய நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். தாதாபுரத்திலுள்ள முதல் இராசராசர் காலத்துக் கல்வெட்டு அங்கிருந்த விண்ணகரக் கோயிலில் இறைவனின் வேட்டைத்

திருவிழாவில் இரவிகுலமாணிக்க ஈசுவரர் கோயிலைச் சேர்ந்த தளிச்சேரிப் பெண்டுகள் முப்பத்திரு வரும் பங்கேற்று, விழா ஊர்வலத்தில் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் சென்றதாகக் குறிப்பிடுகின்றனர். தேவைக்கேற்ப இவர்கள் பிறகோயில்களின் விழாக்களிலும் பங்கேற்றுக் கலைநிகழ்ச்சிகள் நடத்தினரென அறிய முடிகிறது21.

தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துத் தளிச்சேரிப் பெண்டுகள் ஒவ்வொருவருக்கும் வாழ்வூதியமாக ஆண்டுக்கு நூறு கலம் நெல் தரக்கூடிய ஒரு வேலி நிலம் பங்காக வழங்கப்பட்டிருந்தது. கோயில்களில் பாடப்பெற்ற ஒரு வேலி நிலம் பங்காக வழங்கப்பட்டிருந்தது. கோயில்களில் பாடப்பெற்ற திருமுறைகளுக்கும், பிரபந்தப் பாசரங்களுக்கும் தேவரடியார், தளியிலர், பதியிலார், தளிச்சேரிப்பெண்டுகள் ஆகியோர் ஆடின. தாதாபுரத்தில் பெருமாள் கோயில் இறைவனின் வேட்டைத் திருவிழா ஊர்வலம் அவ்வூர்ச் சிவன் கோயிலைச் சேர்ந்த தளிச்சேரிப் பெண்டுகள் முப்பத்திரண்டு பேரும் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் சென்றனர்.

திருக்கோயில்களில் பாடவும், தேவரடியார், தளியிலார், பதியிலார், தளிச்சேரிப்பெண்டுகள் ஆகியோருக்கும் பாட்டுப் பயில்விக்கவும் பாணர்கள் இருந்தனர். இவர்களை தேவைக்கேற்பப் பணியமர்தாகவும் பொறுப்பையும் ஏற்றிருந்தார். கோயில் திருவிழாக்களின்போது இறையூர் வலங்கள் நிகழ்ந்தன. உற்சவர் திருமேனிகள் கோயிலைச் சுற்றியமைந்த வீதிகளிலும், ஊருக்குள்ளும் திருவலமாய் எடுத்துச்செல்லப்பட்டதைப் பல கல்வெட்டுகளால் அறிய முடிகிறது22. இவ்வூர்தலங்களில் பாணர்களும், பிடாரர்களும், காந்தவர்களம் பாடப் பதியிலார் தளியிலார், தேவரடியார், தளிச்சேரிப்பெண்டுகள் ஆகியோர் அதற்கேறப ஆடினார். இறையூர்வல வீதிகளே இவ்வாடல்களுக்கு அரங்குகளாகிப் பாலிந்தன. இவ்வூர்வலங்களில் ஆடலும், பாடலும் தவறாமல் நிகழ்த்தி மகிழ்ந்ததையும் திருமுறைப் பாடல்கள் தெளிவாய் உணர்த்துகின்றன. சோழர்கள் காலத்தில் பெருகின. அனைத்துக் கோயில் விழாக்களிலும் இறையூர்வலங்கள் நிகழ்ந்தன. அதற்காக பல்வேறு இறைத்தோற்றங்கள் செப்புத்திருமேனிகளாகக் கொடையாளர்களால் கோயில்களுக்குச் செய்தளிக்கப்பட்டன23.

இக்கோயில்களில் கோயில் சார்ந்த ஆடற்பெண்கள் அடியதுடன், பூத்தட்டுச் சுமப்பது, திருநீற்றுச் சம்புடம் ஏந்துவது, இறைத்திருமேனிக்குக் கவரிகள் வீசுவது, ஆடியவாறே திருவாலத்தி எடுத்தல், திருச்சூலம் தாங்கியாடுதல், ஆங்காங்கே ஊர்வலத்தை நிறுத்வனிடங்களில் பாடுவது எனப் பல்வேறு பணிகளையும் செய்தமையைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது24. எந்தெந்த கோயில்களில் ஆடல் மகளிரும் உச்சப் பணியாளரும் இருந்தனரோ, அந்தக் கோயில்களில் எல்லாம் இசையும், ஆடலும், நிகழ்த்தக்கூடிய அளவிலமைந்த மண்டபங்களும் இருந்தன. அத்திருக்கோயிலில் நானூறு ஆடல் மகளிர் பணியாற்றினர். முதல் இராசராசர் காலத்தில் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்தில் உருவாக்கப்பட்ட தளிச்சேரிக்குச் சோழ மண்டலத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆடற்கலைஞர்கள் நானூறு பேரின் பெயர்கள் தளிச்சேரிக் கல்வெட்டில் பதிவாகியுள்ளன. ஆடற்கலைஞர்களுக்குச் சோழர் காலச் சமுதாயத்தில் நல்ல மதிப்பிலிருந்தது. அவர்கள் பணி செய்த கோயில்களிலும், அவர்களுக்குத் தகுந்த மரியாதைகள் தரப்பட்டன. கோயில் தேவரடியார்களுடன் இணைந்து சமுதாயத்தின் பல்வேறு இனமக்களுள் எந்த வேறுபாடும் கருதாது ஒரே வளாகத்தில் வாழ்ந்தனர்25.

சமுதாயத்தின் பல்வேறு இன மக்களுடன் இணைந்த நிலையில் ஆடற்கலைஞர்களின் கொடைகள் அமைந்துள்ளமையைக் கல்வெட்டுச் சான்றுகள் நிறுவுகின்றன.

மன்னர்கள் தேவரடியார்களை மிகவும் மதித்து அவர்தம் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்தமைக்குத் திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில் கல்வெட்டொன்ற சான்றாகின்றது. தஞ்சாவூர் இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டுகள் பல இதுபோல செய்தளிக்கப்பெற்ற எண்ணற்ற நகைகளின் விரிவான அமைப்புகளையும் அவற்றில் சேர்க்கப்படட தஙகம், நவமணிகள் போன்றவற்றின் எடை, எண்ணிக்கை போன்ற விவரஙகளையும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. மடைப்பள்ளிகளுக்கும் இறைவனின் படையல்களுக்குமாய் பல வகையான பாத்திரங்களையும் கொடையளித்தனர். இறைவனுக்கு

நகை, பாத்திரம் அளிக்கும் இத்திருப்பணியில் ஆடற்பெண்களும் தங்களால் இயன்ற அளவு பங்கேற்றதை இராஜராஜீசுவரத்துக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது 26.

தேவரடியார் என்ற சொல்லாட்சி முற்சோழர் கல்வெட்டுகளில் மிகக் குறைவான அளவிலேயே இடம்பெற்றுள்ளது. தளித்தேவதனார் பிள்ளைகள் எனும் அழைப்பு மறையத் தொடங்கும்போது இத்தேவரடியார் எனும் சொல்லாட்சி இடைச்சோழர் காலத்தில் செல்வாக்குப் பெற்று, பிறசோழர் காலத்தில் பெருவழக்காவதைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. நக்கன் என்ற சொல் சைவக் கோயில் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட அனைவரையும் குறிக்கும் சிறப்புச் சொல்லாகவும் விளங்கியது27.

தேவரடியார்களாகக் கல்வெட்டுகள் குறிப்பிடும் ஆடற்கலைஞர்களைத் தளியிலாருக்கு அடுத்த நிலையில் இருந்தவர்களாகக் கொணர்கின்றனர். இவர்களில் சிலர் கோயில் தொடர்பான பல்வேறு பணிகளைச் செய்தனர். சிலர் ஆடற் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். பதியிலாரும், தளியிலாரும் மிகச் சில கோயில்களிலேயே இடம் பெற்றிருந்தமையால் பெரும்பாலான கோயில்களில் தேவரடியார்களே முதன்மை ஆடற் கலைஞர்களாகவும் விளங்கினர்28.

சோழர் காலத்தில் இவ்வாடற்பெண்களின் வாழ்க்கை பாதுகாப்பானதகவும், செல்வச் செழிப்புடையதாகவும் விளங்கியது. ஆடற் பெண்களைப் போலவே ஆடலாசான்களும், பாடலாசான்களும், இசையாசிரியர்களும், கருவிக் கலைஞர்களும் கூத்தர்களும், சோழர் காலத்தில் வளமான வாழ்க்கையைப் பெற்றிருந்தனர். அவர்தம் கலைத்தினைப் பயன்படுத்திக் கொண்ட கோயிலார், அவர்கள் வாழ்நாள் முழுவதும் துன்பமின்றி வாழத் துணைநின்றனர்29.

தமிழ்நாடளவில் வேறெந்த அரசமரபைக் காட்டிலும் சோழர்கள் காலத்தில்தான் அதிக அளவிலான கல்வெட்டுப் பதிவுகள் நிகழ்ந்தன. இக்கல்வெட்டுகளுள் பெரும்பாலானவை ஆவணங்களாக அமைந்தவைதான் எனறாலும் அவை தரும் வரலாற்றுத் தரவுகள் அக்காலத்துச் சமுதாயத்தை அறிந்துகொண்டப் பேருதவிப் புரிகின்றன. தமிழ்நாடு முழுவதுமாக அரசாலும் தனியாராலும் இதுநாள் வசையிலும் படியெடுக்கப்பட்டிருக்கும்

பல்லாயிரக்கணக்கான சோழர் கல்வெட்டுகளுள் ஆடற்கலை பற்றியும் அதனுடன் தொடர்புடைய இசைக்கலைப் பற்றியும் எடுத்துரைக்கின்றன. ஆடற்கலைஞர்கள் மற்றும் தளிச்சேரிப் பெண்டுகள், தேவரடியார், பதியிலார், தளியிலார் என்று பல்வேறு வகைப்பட்ட ஆடற் கலைஞர்கள வாழ்க்கைச் சுமைகளால் வாடிப்போகும் உள்ளத்திற்குக் கலைகளே வடிகால், அன்றாட அலுவலகஙகளை மறப்பதற்கும் நெஞ்சார மகிழ்வதற்கும், மக்களுக்கு ஆடலும், பாடலும் இசையும் பெருந்துணையாய் அமைந்தன30.

**முடிவுரை**

கோயில் வளாகங்களிலும், தோப்பு மண்டபங்களிலும், ஊரக அம்பலங்களிலும், திருவிழா வீதிகளிலும் நிகழ்ந்த ஆடற் கலைஞர்களின் பல்வேறு வகையான கூத்தர்களும் ஆட்டஙகளும் மக்களிடம் அவர்களுக்குப் பெரும் செல்வாக்கைப் பெற்றுத் தந்தன. தங்களை மகிழ்ச்சிப்படுத்திய அக்கலைஞர்களை மக்கள் பெரிதும் நேசித்தனர். அவர்களிடம் அன்பு பாராட்டினர். பட்டஙகள், விருதுகள் தந்து, சிறப்புச் செய்ததுடன் கோயில் விழாக்களில் சிறப்பு மரியாதைகள் தந்தும், விருந்தளித்தும் அவர்களை பெருமைப்படுத்தினர்31.

முற்சோழர், இடைச்சோழர் காலத்தில் வளர்நிலை உச்சத்தைச் கண்ட ஆடற்கலை, பிற்சோழர் காலத்தில் தேயத் தொடங்கியதையும், ஒழுக்கநெறிகளோடு வாழ்ந்த ஆடற் கலைஞர்களின் வாழ்க்கையில் நிலையில்லாத பின்னர்களையும ஆட்சிகளும், அவற்றின் விளைவான பாதுகாப்பற்ற சமுதாயச் சூழல்களும் பொருளாதாரச் சீர்குலையும் இணைந்து இருள்சேர வைத்ததையும் பிற்காலக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன.

சமுதாயத்தில் மகிழ்வூட்டித் தாங்களும் மகிழ்ச்சிகளோடு வாழ்ந்த நெறிசான்ற நிலையிலிருந்து ஆடற் கலைஞர்கள் தாழத் தொடஙகினர்32.

**அடிக்குறிப்புகள்**

1. ளுடிரவா ஜனேயைே ஜளேஉசனிவடைிளே, ஏடிடரஅநள ‘4 ீ, 827/ 830

2. ளுடிரவா ஜனேயைே ஜளேஉசனிவடைிளே, ஏடிடரஅநள ‘4 ீ, 224, ருேேயட சுநிடிசவள டிே ஜனேயைே நுிபைசயிரல, 1939/40 ி,192, ளுஜஜ 17 ி,593/596

3. மு.நளினி.இரா. கலைக்கோவன், தளிச்சேரிக் கல்வெட்டு, கழக வெளியீடு, 2002, பக். 13–17.

4. ருசுநு 1919 14இ ீ,255/257,

5. ளுஜஜ 23 306/309,

6. ருசுநு 1912 ி, 128இ 211,

7. இரா. கலைக்கோவன், பழுவூர்ப் புதையல்கள், பக். 249–251.

8. ஜனைஇ ி,252/254,

9. ளுஜஜ,2இ ி,66/69,

10. ஜனை,இ 8இ 644

11. ளுஜஜ,5இ ி, 579/581,

12. ளுஜஜ,19இ ி,283/284,

13. ளுஜஜ,19 92/93இ ீ,249இ19,181,

14. ளுஜஜ,15இ ி,520,

15. ருசுநு 1940/41 ி,160/161,

16. மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பக். 190–198.

17. ருசுநு 1940/41ீ,160,

18. ஞஜஜ;3 43இ ருசுநு 1918ி,349இ 1925இி,139
ஞஜஜ,13 74இ ருசுநு 1936/37இி,149,

19. கூாந ழனைாரஇ 18 ஞூடிஎநஅநெச/1995,

20. கூாந ழனைரேஇ 17 துரநே/1994,

21. குடவாயில் பாலசுப்பிரமணியன், தஞ்சாவூர், ப.270–272.

22. திருவீழிமிழலைக கல்வெட்டுகள், ப.525.

23. தளிச்சேரிக் கல்வெட்டுகள், வரலாறு–5, பக்–72–75.

24. மா. இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி, பக். 198–200.

25. குடந்தைக் கல்வெட்டுகள், முதல்தொகுதி, சென்னை, தமிழ்நாடு, அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1980.

26. நன்னிலம் கல்வெட்டுக்கள, மூன்று தொகுதிகள், சென்னை, தமிழ்நாடு,

27. அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, 1979, 1980.

28. சென்னை அருங்காட்சியகச் செப்பேடுகள் வரலாறு–1, பக். 69–71.

29. தளிச்சேரிக் கல்வெட்டுகள் வரலாறு–5, பக்.80–83

30. நன்னிலம் கல்வெட்டுக்கள், பக். 254–257.

31. ருசுநு 1911ி, 94/96,

32. ருசுநு 1912ி,296இ 1960/61ி,300,

33. ஞஜஜ 23ி, 473/475இ ீ4133, 134,